**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC47/2010** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution : | **PW - 3** |
| | | Defence : | |
| | | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | கணேசன் |
| Father's / Husband Name | : | த.பெ.வீரையன் |
| Village | : | நம்பர் எம்ஜஜி.336, முல்லை நகர், புதிய குடியிருப்பு வாரியம், தஞ்சாவூர் |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு) |
| Age | : | 66/2020 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.01.2020**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.ஆர்மங்கையர்கரசி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, ச.சுரேஷ் தட்டச்சர்**

**CC 47/2010** Date: 10.01.2020

முதல் விசாரணை

நான் நம்பர் எம்ஜஜி.336, முல்லை நகர், புதிய குடியிருப்பு வாரியம், தஞ்சாவூர் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2008ம் வருடத்தில் கீரைக்கொல்லை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். பட்டியல் சாட்சி 1 நடராஜன் புகார்தாரரை எனக்கு தெரியாது. பார்த்திருப்பேன் ஆனால் ஞாபகமில்லை. ஆஜர் 2வது எதிரி வருவாய் துறையில் வேலை பார்த்து வந்தார். வழக்கின் 1வது எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2008ஆம் ஆண்டு நான் பணியில் இருந்தபோது தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் என் அலுவலகத்திற்கு வந்து நகர புல எண் 4140-1, 4140-3 ஆகியவற்றில் கணக்கு பதிவேடு தயார் செய்தபோது அ-பதிவேடு யார் பெயரில் இருந்தது என்று கேட்டார்கள். நான் அ-பதிவேடு ஆவணத்தை எடுத்து காட்டினேன். அதில் பட்டா எண் 108ல் மேற்படி நகர புல எண்களுக்கு கோவிந்தசாமி பிள்ளை என்பவரின் பெயரில் இருந்தது. அது சம்மந்தமாக நான் அ-பதிவேட்டின் நகல் வழங்கினேன். அந்த அ-பதிவேடு 31.05.1962ல் தயார் செய்யப்பட்டுள்ளது அதன் சான்றிட்ட நகல் அதசாஆ.10 (3பக்கங்கள்) ஆகும். அதில்

**CC 47/2010** Date: 10.01.2020

2ம்பக்கத்தில் புல எண் 4140-1, 4140-3ல் சா.கோவிந்தசாமிபிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புல எண் 4140-2பி-க்கு உண்டான சிட்டா 16.11.2009தேதியில் வழங்கினேன். அது பச்சைமுத்து பிள்ளை என்பவரது பெயரில் உள்ளது. அது அதசாஆ.11ஆகும். என்னிடம் காட்டப்படும் புல எண் 4140-1பி-க்கு உண்டான சிட்டா 20.11.2009தேதியில் வழங்கினேன். அது ராமலிங்கம் என்பவரது பெயரில் உள்ளது. அது அதசாஆ.12ஆகும். என்னிடம் காட்டப்படும் புல எண் 4140-3-க்கு உண்டான சிட்டா 20.11.2009தேதியில் வழங்கினேன். அது ராமலிங்கம் என்பவரது பெயரில் உள்ளது. அது அதசாஆ.13ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 07.12.2009 அன்று நான் வழங்கிய சான்று ஆகும். ஆவணங்கள் எப்பொழுது தயார் செய்யப்பட்டது, எப்பொழுது வெளியிடப்பட்டது என்பதை பொறுத்து நான் அந்த சான்றிதழ் வழங்கியுள்ளேன். அது அதசாஆ.14ஆகும். என்னிடம் காட்டப்படும் 07.12.2009அன்று நான் சான்றிட்டு வழங்கிய அ-பதிவேட்டின் 31.08.1966அன்று ஆவணங்கள் வெளியிடப்பட்டதற்கான சான்றிதழின் உண்மை நகல் அது அதசாஆ.15ஆகும். மேற்படி ஆவணங்கள் 1962லிருந்து தயார் செய்யப்பட்டு 1966ல் வெளியிடப்பட்டது. மேற்படி புல எண்கள் 4140-1 மற்றும் 4140-3 ஆகியவை 1962ஆம் ஆண்டிற்கு முன்பாகவே பிரிக்கப்பட்டிருந்தது. இது சம்மந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கறிஞர் ஆஜர் போதிய அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

ஒம்.அ.முகம்மதுஅலி
நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்